# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 389/2016

ஆணை எண்: 254/2017

நாள்: 9/11/2017

திரு. எம். பழனிவேல்,
த/பெ. முருகேசன்,
முள்ளிப்பள்ளம்,
புவனகிரி,
கடலூர் மாவட்டம். - முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம் - எதிர் மனுதாரர்

## ஆணை

கடலூர் மாவட்டம், புவனகிரியில் (முள்ளிப்பள்ளம்) வசிக்கும் திரு. எம். பழனிவேல் என்பவரின் 06.11.2014 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 06.05.2016 அன்று பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களது 22.4.2016 நாளிட்ட கடிதத்துடன் பெறப்பட்டு 389/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

கடலூர் மாவட்டம், புவனகிரியில் (முள்ளிப்பள்ளம்) வசிக்கும் திரு. எம். பழனிவேல் என்பவரது முறையீட்டு மனு குறித்து செயல் அலுவலரது அறிக்கை கோரி ஆணையிடப்பட்டது. 13.09.2017 நாளிட்ட அறிக்கை வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது. அதன் நகல் இத்துடன் இணைத்து

அனுப்பப்படுகின்றது. 2015-ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படும் முறைகள்) விதிகளின்படி உரிய படிவத்திலும் / ஆதார ஆவண நகல்களுடன் மற்றும் ரூ.10/- மதிப்பிலான நீதிமன்ற வில்லையுடன், இன்றைய நிலையில் குறிப்பான புகார் / ஆட்சேபனை ஏதும் இருப்பின் முறையீட்டு மனுவினை முறையாக தாக்கல் செய்யலாமென மனுதாரருக்கு தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு நவம்பர் 9–ஆம் நாளன்று கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

இணைப்பு: அறிக்கையின் நகல்

-//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்:

1. திரு. எம். பழனிவேல், த/பெ.முருகேசன், முள்ளிப்பள்ளம், புவனகிரி, கடலூர் மாவட்டம். *(செயல் அலுவலர் மூலமாக)*

2. செயல் அலுவலர், புவனகிரி பேரூராட்சி, கடலூர் மாவட்டம்.